# NSW HEALTH

## COVID-19 Key Points – Tuesday 14 September 2021

**நியூ சவுத் வேல்ஸ் ஹெல்த்-இலிருந்துவரும் 2021 செப்டம்பர் 14-க்கான கோவிட்-19 பற்றிய முக்கிய குறிப்புகள்**

- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணி நேரத்தில், 1,127 கோவிட்-19 உள்ளூர் நோய்த்தொற்றாளர்கள் நியூ சவுத் வேல்ஸ்-இல் பதிவாகியுள்ளனர். கவலைக்கிடமாக, இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.
- நியூ சவுத் வேல்ஸ் இப்போது 8.2 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசிகளை ஆட்களுக்குச் செலுத்தியுள்ளது. 16 வயதிற்கு மேற்பட்டவர்களில் 78.8% ஆனோர் தடுப்பூசியின் ஒரு மருந்தளவைப் பெற்றுள்ளனர், மக்கள் தொகையில் 46.5% ஆனோர் முழுமையாகத் தடுப்பூசியைப் போட்டுக்கொண்டுள்ளனர். இவை மிகச்சிறந்த எண்ணிக்கைகள் ஆகும். தயவுசெய்து உங்கள் நண்பர்களையும் குடும்பத்தினரையும் ஊக்குவியுங்கள், அத்துடன் உங்கள் தடுப்பூசிக்கு இன்றே nsw.gov.au-இல் பதிவு செய்யுங்கள்.
- யங் (Young) (முரும்பிட்ஜீ உள்ளூர் சுகாதார மாவட்டம் - Murrumbidgee LHD) பகுதியில் கழிவுநீரில் நோய்க்கிருமிகள் கண்டறியப்பட்டுள்ளன, ஆனால் நோய்த்தொற்றாளர்கள் எவரும் இன்னும் அறியப்படவில்லை. தயவுசெய்து விழிப்புடன் இருங்கள்.
- நோய்த்தொற்றாளர்கள் பெரும்பாலும் மேற்கு மற்றும் தென்மேற்கு சிட்னியில்தான் தொடர்ந்தும் உள்ளனர். ஓபர்ன் (Auburn), கிரீனேக்கர் (Greenacre), பாங்க்ஸ்டவுன் (Bankstown), லிவர்பூல் (Liverpool), மெரிலாண்ட்ஸ் (Merrylands), பஞ்ச்பௌல் (Punchbowl), ரிவர்வுட் (Riverwood), யகூனா (Yagoona), கொண்டெல் பார்க் (Condell Park) மற்றும் செயின்ட் கிளேர் (St Clair) ஆகியவையே கவலைக்கிடமான சிட்னியின் புறநகர்ப் பகுதிகள் ஆகும். நீங்கள் கோவிட் கட்டுப்பாடுகளைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பதைத் தயவுசெய்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- இலேசான நோயறிகுறிகளையேனும் கொண்டிருக்கும் எவரையும் பரிசோதனையைச் செய்துகொள்ள முன் வருமாறு நாங்கள் வற்புறுத்துகிறோம்.
- சமூகத்தைப் பாதுகாக்க, இன்று யாஸ்-இல் (Yass) புதிய கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வீட்டிலேயே தங்கியிருக்கும் உத்தரவுகள், இரண்டு வாரங்களுக்கு நடைமுறையிலிருக்கும். உங்கள் பகுதியில் உள்ள கட்டுப்பாடுகளை நீங்கள் அறிந்துவைத்திருப்பதைத் தயவுசெய்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்: https://www.nsw.gov.au/covid-19/rules
- இதுவரை அதிவேகமாக அதிகரித்துவந்த அளவிற்கு, தற்போது நோய்த்தொற்றாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கவில்லை, இருப்பினும் நாங்கள் தொடர்ந்தும் கவனமாக இருக்க வேண்டும்.
- இந்த நோய்த்தொற்றுப் பரவலில் இருந்து நாம் விடுபடுவதற்கு தடுப்பூசி முக்கியமானது, மேலும் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய மக்களைச் சென்றடைய, நாங்கள் பல நிறுவனங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றி வருகிறோம். பின்னால் எவரும் விடுபட்டுவிட மாட்டார்கள்.